தன்பினுற்றுக் கண்வளர்ந்தா னவ். (௨௰)

தாதவிழ்தார்ப் பார்த்திவர்கள் சார்ந்துறைவை யிற்றுயின்றார்
பாதவத்தின் மீத்துயின்ற பாய்பரிதேர் - வாதவன்பூங்
காவிற் றொழுதியெழக் கங்குலறத் தோன்றினனீள்
பூவி மனாமலர வந்து. (௨௧)

சேனையொடு தோரசர் யாரு முணர்ந்தெழுந்தார்
வானமனி வாய்க்கனலி வள்ளலெழுக் - நானுலவு
மீனவிழி மெல்லியலாள் வேந்தனைச்ச மோர்ந்திறைவ
னானதிற னிற்கெவ்வென் றான். (௨௨)

வானமிழ்த நாணுமொழி மானே நெருநலிரா
வூனமுறு மோர்கனவு கண்டுணர்ந்தேன் - யானென்
றிறையளித்தது நாதனைவேந் தேயினனு லோமை
யிறையினிவட் டத்திடுதி ரென்று. (௪௩)

இமைப்பினிலத் தூதுவர்தா மேகியழைப்ப
வமைச்சரொ டொல்லை யணுகி - பெருமாக டுக்கின்
னடைய வமுழ்தபரி சென்னருக வென்றரயன்
செய்யகழல் போற்றிநின்றார் சேர்ந்து. (௪௪)

அந்தநிலை மற்றவர்ப்பார்த் தன்னவனை படந்த
திந்தைதனு வோவென்னை சார்ந்தவனின் - றந்துலை
தாரகைலோ கததே தவிர்ந்தபின்னு லைந்தும -
வானமுயங் காவிருந்தே றுல். (௪௫)

யானே யருந்தவத்தோற் கீந்தனனோர் பேதையைப் போய்த்
தானே யொருத்தியவற் சார்ந்தனளு -டானறனோர்
மாதகன்றான் கணணிருந்தான மற்றொருத்தி நின்றனளோர்
கோதை யுறுதி கொடுத்து. (௪௬)

இன்னனமயா னென்ன விராக்கனவி னேன்சண்ட
சென்ன வினிவினையு மோவறியேன் - கொன்னுயிர்க்கச்
சொப்பனத்தாற் சார்கிறவினைச் சூழ்ந்துளத்து நீயிரெலா
மிப்பொழுதிங் கேயுரைக்கென் றான். (௪௭)

ஐயமையங் கத்துடனே யாள்வினைவன் கண்குடிகாப்
பையமறக் கற்றறித லாங்குடையோன் - றுய்யமனச்
சத்தியகீர்த் திப்பெயரோன் றன்பிருது பௌத்திரனைக்
கைத்தலங்கூப் பித்தொழுது கண்டு. (௪௮)

இந்த வினையெல்லா மெழுந்தவிறற் கௌசிகனு
வந்தமுனி யானவனையு மேலாக்க - மந்திரிரு
நாடு நகரிழந்து நங்கைமகன் வேவ்வேறு
ஊடவனைப் பின்வேறும் யாம். (௪௯)

என்றலைய மன்னு மெனைமகனை யிந்நாட்டை
வென்றியிபுந் தாலும் விதித்தமுறை - யொன்று
மிழவர்க வென்று விசைத்தா னிமைறவன்
கழலரிவை தாழ்ந்து கசிந்து. (௫௦)

கேட்டமைச்ச ரெல்லோருங் கேழ்கிளர்கண் ணீரருவி
காட்டக் கலுழ்ந்தனர்கள் கனமொழிமின் - வாட்டுதுய
ரென்றவரைத் தேற்றியினி தேர்தலிருந் தானப்பாற்
றுன்றியவை சொல்வாந் தொகுத்து. (௫௧)

வேட்டஞ்செய்காண்டம் முற்றிற்று. ஆ. ௨௮௮.

## சூழ்வினைக்காண்டம்.

சூடிசமுீஇக் கோலோச்சுங் கோசலநாட் டண்ணல்
விருபகழி மெய்யதா வோடித் - துடிதுடித்துக்
கோசிகன்முற் றன்பட்ட பாடனைத்துங் கூறியதால்
வீசெயிறறுக் கோலம் விழுந்து. (௧)

காட்டஞ் சிவந்துறுவ னுசிவிட்ட மூச்சினளிக்
கூட்டுமலர்க் கூந்த லுருப்பசியுங் - கோட்டமுறும்
பொற்பினிரு சண்டாளப் பூவையர்க டோன்றியவன்
பற்பவடி நின்றார் பணிந்து. (௨)

கண்டழைத்துக் காதிசுத னென்னெண் கலைகளையப்
பெண்டிருக்குப் பெட்பிற் புகட்டினனுங் - கண்டியவத்
தூழ்ந்தறவோர் சொற்றத் தரிச்சந் திரன்றனத்தோ
டாழ்ந்ததடத் துற்றன னென்றார். (௩)

என்னியதன் னெண்ணமெலா மீடேறு மென்றேம்ப
லெண்ணிமுனி நங்கையர்ப்பாற் றின்னேபோய்ப் - பண்ணிவ
வாசித்துக் கோமான் மதிக்குடையல் வாற்கலவி [ல்யாழ்
நேசித்துக் கொண்டேகுக நீர். (௪)

என்றுவிடை நல்கலுமே யேந்திழையார் மற்றவனை
நன்றிறைஞ்சி யேகி நறுங்கமலந் - துன்றிலஞ்சி
மாட்டுறையுஞ் சோதி மணிமகுடக் கொற்றவனைத்
தாட்டுணைமுற் றாழ்ந்துநின்று தான். (௫)

மன்னு நினதெழிலை வண்மைகளைப் பார்த்தியம்பப்
பன்னுக்க ளுங்கள் படைத்திலமா - லென்று
வியந்துரைத்தார் கேட்டிறைவன் மின்னனையீர் நீர்யார்
நயந்தடுத்த தென்னவில்கென் றான். (௬)

கன்ன லனுக்குமின்சொற் காரிகையார் காவலனே
மின்னெழிலி னாங்கிவ் விபினத்து - மன்னுறும்யா
நீசப் புலைச்சியர்க ணின்கழலைக் கண்டிறைஞ்ச
வாசைப் பட்டடைந்தே மால். (௭)

புல்லறிவி னோயேங்கள் போற்றிசையாழ் கீதமொடு
வல்லம் வறிநின்று கேட்கவெனச் - சொல்லியெடுத்
தியாழ்மா டகமுறுக்கித் தந்தியினி தேதடவிக்
கேழோ வியத்திற் கிளர்ந்து. (௮)

காரதனுங் கின்னரரு நாணமுறப் பட்டமரம்
பாரதனிற் பல்லவங்கள் காட்டவவை - சீரவிருந்
தேழிசையும் பாடினர்க ளிந்துமதி யோடுதிரு
வாழுகலத் தண்ணன் மகிழ்ந்து. (௯)

நன்மருங்கு லார்வதன நோக்கிமலர்க் கையளமர்ந்தே
பொன்மணிப்பூண் பீதாம் பரமுதவிக் - கொண்மெனவு
மின்னவையாங் கொள்ளியரீண் டெண்ணியடைந் தேமல்லே
முன்னியவை கேட்க வுவந்து. (௰)

இல்லையெனு தென்னியதொன் றேற்போர்க் களிக்குமன்னு
சொல்லுமிவை நின்னருளாற் றுன்னிடனே - மல்லிவேயூர்
கின்கனிகர் நின்றன் செழுங்கவிகை யீந்தருளா
வெங்களுக்கின் றென்றா ரெடுத்து. (௧௧)

## சூழ்வினைக்காண்டம்.

தொன்றுதொட்டு வந்த தலங்கு மணிக்குடைய
யின்றுமசகி யான்வழுகை யாட்டேனீ - தன்றவே
றொன்றினைநீர் வேணடி னுரவுவன்மன் னென்றுரைத்தான்
குன்றினைநே ரம்புயத்துக் கோன். (௧௫)

சேட்டதனைப் பச்சையிளங் கிள்ளைமொழி யாரிறைவ
மாட்டாய் மணிக்கவிகை நல்கவெனிற் - கே ட்டினையைப்
புல்லியெமக் கின்பம புராதருளக வென்றனுமெய்ச்
சொல்லமைச்சன்றூதையர்ப்பார்த்து. (௧௬)

கொடுப்ப சொடுப்பர் கொடாத சொடாஅர்
விடுப்ப விடுப்பர் விடாத - விடுகிலாற
சொல்லத தலைவனீர் சொல்லி யதப்பகொள்க
வலலதுசெல வென்றறைநதா ளுநகு. (௧௭)

வள்ளலென யாமடைந்தேம் வந்திரட்போர்க் கொன்றியாக்
கள்ளனெனக் கண்டால வருகலமென் - றள்ளிலைவேற்
கண்ணார் புகன்றார் கதமடைந்து தள்ளுமென்றான்
மண்ணாளும் வேந்தன் மனத்து. (௧௮)

கேகயமன் னூர்நம்மைக் கிங்கரர்தள் வாளுறநுக்
தேக நடுங்கியவர் செங்கையின்யாழ - போகவிட்டு
நண்ணரிய காட்டோடி நன்குதிர முட்கீறும்
புண்ணொழுக நெஞ்சழிந்து போந்து. (௧௯)

விட்டவிறற் கௌசிகன்முன் வீழ்ந்தலறி யாங்குத்தாம்
பட்டவிட ரெல்லாம் பகர்ந்தனர்சேட் - டட்டபுலை
வாழ்க்கையன்வெங் கோப மனதெழக்கட் டுத்தெறிப்ப
மீக்குலவேற் றிற்சிரிதது வேர்த்து. (௨௰)

வேகத் துடனெழுந்து மெய்த்தவத்தோர் சூழ்ந்தவரப்
பூகத்தின் வாளையுகள் பொய்கையின்மாட் - டேகினன்கண்
டாங்கிறைவன் சென்றெதிரி லந்தணனெவன் கோபமெனுத்
தாங்கினன்கம் மேலவன்பூர்த் தான். (௨௧)

மாக்களை முன்சொன்னாய் வராகத்திற் கூறுசெய்தாய்
பூக்குழலென் காதற புதல்வியர்தம் - வாக்கிலேழும்
பாட்டைப் பழித்தாய பாவி நீயென்றான்
கேட்டைக் குறித்தமுனி கேட்டு. (௧௯)

காவேகர் பூம்பொழிலை நாசப் படுத்திடினு
மீடுடைய நீவிடுதேரா யென்றறிந்தா - னீசனை [யைத்
தூய்விலங்கை வீட்டுவனோ தொலைவிலையேன் செய்பிழை
தாயைநிகர்த்த தாயபொறுகவென்றான். (௨௰)

வேந்தனுரை காதிலுற விச்சுவா மித்திரன்றான்
சேந்துவிழி நோக்கித் தெரிவையர்பாப் - போக்கிசைத்தா
னன்றுரை நியடிதந்தே யாவகோட்டு காரணமற்
றென்றுடென் றானே யிடித்து. (௨௧)

தக்கபடி பேசாத தன்மையினு லிர்நின்ற
விக்குமொழி யேந்திழையார் தன்னுவிதேன் - புக்கதிலோ
தன்றியுநின யககளிய சொன்ப தறிந்திலன்யா
னின்றிதனை நீசமிக்க வென்று. (௨௨)

ஓதி மலர்ப்பதத்தை யொண்முடிசேர்த் தானிருபன்
கோத மகலாத கோசிகனென் - கோதையரா
நீவதுவை செய்தக்கா லின்பிழையை யான்பொறுப்பேன்
காவலனே காணென்று ஞல். (௨௩)

வேத முடிவுணர்ந்தோய் வேந்தர் புலைக்குலத்து
மாதர்தமை வேட்டன் மாபோவென் - றோதினன்மன்
சாவத்தாற் சண்டாள னானவன் சேய் நீயிவளை
மேவத் தருமென்றான் விண்டு. (௨௪)

அன்றுமல ரோன்மதலை யாடுகொடுஞ் சாபத்தாற்
றன்றுபுலை தீர்த்திட்ட தூயோனே - யின்றெனைநீ
சண்டாள னுக்கு தனிமணத்து மன்னியதென்
விண்டே விளம்பென்றான் வேந்து. (௨௫)

மூன்றுளது தாரை முழுப்புலையை நீக்கினது
மின்றுமது செய்த வெனக்கரிதன் - றென்றுரைகேட்
டேந்தலை யாணிறை வேழையரைச் சேர்கென்றான்
வாய்த்தவிறற காதி மகன். (௨௬)

அம்மொழியு மன்னன் மறுத்திடலு மவ்விருடி
வெம்மையழ லென்ன விழிசிவந்தே - யிம்மணிடை
வெட்டிமைசெய் பழசமர்க்கு வேதநொழும் பாதியென
விட்டனன்வெஞ் சாப மெடுத்து. (௨௭)

அன்னையன்று வென்னை யறச்சி றிடுங்கருவ
லென்னகவில வாரா திருநிலத்தே - யெனனைகரு
காமிதி வேண்டிடினு நலகுவனிய வெண்டிலாயான்
கூடலனென் றனகோன் குனிந்து. (௨௮)

சொன்னமொழி தப்பாமற் றென்று மினியெனக்கு
நன்னரவை நீயாத்து நல்கியவா - யெனனமுனி
சொற்றிடலுங் கேட்டுச் சுடாகழற்கான மன்னவாகோன்
மற்றவகை செய்தான் மகிழ்ந்து. (௨௯)

இவ்வுலகை யாளுள யேந்தலின தாழிமுடி
தெவலவ்வாள சேயூறு செய்யகழ - லவ்விவிழி
மாதணியு மைந்தன மணிபபணியுந் தாவெனறான்
மாதவன்வள ளவ்வதனம் பாாதது. (௩0)

அன்னவகை யெலலா மளித்துநின்ற கோமானைப்
பின்னருமக் காதிசுதன் பேசினன்கண - டின்னமைமன்
வீடுபெறந தநதனைகீ மெலலியல்சேய் சாதநுவிலை
நீடடையை நீட்டியக லென்று. (௩௧)

ஆசையினிப் போயிரப்போ மாடையளித் தாலெனக்கோன்
கூரனூர்கொண டானுணர்ந்து கோசிகன்றன் - மீனாயினை
மூவகையாக கிழ்த்திட்டா னெற்றான் முனியாது
தூவிழ்ரு சங்குமகன் றாழ்ந்து. (௩௨)

தானுந் தனிமகனுந் தையலுஞ்செங் கற்றுணியை
மானங் கெடாமை மகிழ்ந்துவைத்தார் - வானுமண்ணும்
போற்றுமிறை பிற்கழித்த பொற்கலையைக் கொண்டுவைத்தா
னாற்றலற வோன்முன் பணிந்து. (௧௩)

மெய்த்தவனே நல்காய் விடையெனக்கென் றானிருபன்
குத்திரமார் நெஞ்சத்துக் கோசிகன்கேட் டித்தினத்தே
யானறிஞர் வந்திரப்ப விட்டிற்கு நேர்ந்தபொரு
ளீதல்கி நீங்கென்றா னால். (௧௪)

எப்பொருளு நாடுநக ரெய்ந்தாய் நினக்களித்தே
னிப்பொழுதென் பால்யாது மில்லைமொழி - தப்புலன்யா
னென்றிரங்கி நீயவதி நல்கியெனக் கான்விட்டான்
மன்றபொரு ளீவலென்றான் மன். (௧௫)

சொற்றிறம்பு வாயாயிற் றுளூறவே தென்றிதனை
கற்றவத்தோன் கேட்டா னரேந்திரன்யான் - சொற்றவறி
னன்னியன்ற துயிலழையை யாதரித்தன் றுன்கடைவாய்
மன்னுமவ னுவனென்றான் மன். (௧௬)

காற்பதின்மே லெட்டியைந்த நாளையிலென் றுள்காத்தின்
பாற்பொழிவாய் பொன்னெல்லாம் பார்த்திவனே - மேற்புகன்ற
காலத்து ணல்காயேற் காசுனக்காங் காணென்றான்
கோலச் சடைமுனிவர் கோன். (௧௭)

வணங்கிவிடை பெற்றநகு மன்னவனைக் கூய்நீ
யிணங்கியெனக் கீந்தபொரு ளெல்லாங் - குணஞ்சிறந்தோ
யென்னுடனே வந்தபதி யேசொப்புத நன்றென்றான்
மன்னுதவக் கௌசிகனு மன். (௧௮)

அவ்வண்ணம் யான்புரிவ னந்தணநீ போதுகென்றுச்
செவ்வண்ண நெஞ்சிறைவன் செப்பினனாற் - றெவ்வண்ண
மொன்னனைப் புரிலசகர ரொப்பனைசெய் தாரவன்முன்
மன்னுஞ் சிலமுனிவர் நன்கு. (௧௯)

காவலனுங் காதலனுங் காரிகையுங் கானடந்து
மேவமத மாவிவுளி மேலேறித் - தாவதர்பின்
போதமுனஞ் சேனைசெலப் பொன்னிரத மீதிவர்ந்து
மாதவனவ் வாவி யகன்று. (௪0)

மாநகரில் வாழுநர்தம் மன்னையெதிர் கொள்ளவுற்றுத்
தேனருதா ரோதித் திருவொடுசேய் - மானவனுந்
தேர்மிசைவா ராமே திருவடிகள் சேப்பவரல்
கார்விழியாற் கணைடுகுப்ப நீர். (௪௧)

வல்லை யயோத்தி வளநகரி யின்புறத்துப்
புல்லுபுதேர் விட்டிழிந்தான் பூபாலன் - சொல்விருடி
தன்னைநக ருட்கொடுபோய்த் தன்பொருளெல் லாநதந்தே
மின்னுமரி யாதனத்தின் மீது. (௪௨)

வீறறிருப்பச் செய்தவனை வேரிமலர்த் தாள்பரவிப்
போற்றிநின்முன் போந்த புரவலரு - நூறறுறைதேர்
மந்திரிமார் மங்கையரு மள்ளரும்பின் னவ்வறிஞன்
சுந்தரத்தா டாழ்ந்து துதித்து. (௪௩)

நிற்கின்ற தங்க ணிருபனைக்கண் டேயழுதார்
கற்கொன்ற தோளரசன் கையமைத்தீண் - டெற்கொன்று
மன்பொடுநீர் முன்செய்த வப்பரிசே யிம்முனிவற்
கின்புறுமா செய்கமுறை யின்று. (௪௪)

என்றியம்பி னன்வினவி யெல்லோரும் வள்ளலடி
நன்றிறைஞ்சி வாய்புதைத்து மெய்நடுங்கி - நின்றிறைவ
நின்னுரையை யார்மறுபபர் நீருலகி லென்றழுதா
ரன்னதவன் பார்ததவச ஞய். (௪௫)

இந்நகரு நாடு மிருநிதியு நீமகச்கு
முன்னளிக்க நேர்நதபொருண் முற்றுமியான் - மன்னிழப்பே
னென்மகளிர் தம்மைமணர் திஙகிருந்தி யென்றிறைவன்
பொன்மலர்க்கை தொட்டான் புரிநது. (௪௬)

புல்லருந்து மேயரிமாப் பொங்குபசி யுற்றாலு
நல்லமறை கற்றுணர்ந்தோய் நானுனக்குச் - சொல்லலுமன்
வேண்டுமோ விச்சொல் விடுகவென்று வேதியன்கால்
பூண்டனன்கை யாற்கோன் புகன்று. (௪எ)

ஆயி னெனதுபொருட் காளைவிடு வேனாளைப்
போயகனீ மன்று புறத்தின்றென் - றாயுமறைக்
கோசிகன்சொற றான்வினவிக் கோசலர்கோ னாயேன்செய்
யாசெவையு நீபொறுத்தி யால். (௪அ)

என்றுபுலஞ் செற்றோ னிணைச்சரண்மேல் வீழ்ந்திருந்தா
னன்றெழுதி நான்சமிததே னற்குணத்தோ-யென்றறவோன்
சொல்ல வெழுந்திருந்து தோன்ற லமைச்சரைக்கை
மெல்லப் பிடித்து விழைந்து. (௪கூ)

காட்டியிவர் செய்யுங் கடும்பிழையு நீகருத
னீட்டுசடை யோய்நின் னடைக்கலமென் - றேட்டளக
மாதுடனே சேயை வணங்குவித்துப் போறறிவிடை
நீதருகென் றானகன்றா னோர்ந்து. (௫0)

முப்புரிநூன் மார்பு முதுமறைதேர் நாவினெடு
துப்புறழ்நீள் வேணியுள தூயோர்க - ளெப்புடையுஞ்
சூழமுடி வேந்தர் துதைந்திறைஞ்சக் கௌசிகனு
மாழியுல காண்டா னமர்ந்து. (௫௧)

சூழ்வினைககாண்டம் முற்றிற்று. ஆ ௩௩௯.

## நகர்நீங்கியகாண்டம்.

அப்பா லுலகனைத்து மந்தணனுக் கீந்தன்பி
னெப்பாலுஞ் சொன்னிறுத்த வேந்தலவிர் - றப்பாரும்
வாயணங்குங் காதன் மகனு முடன்வரப்பொற்
கோயினின் றுங் கோலமறு குற்று. (௧)

கண்டவர்க ளெல்லோருங் காலமழை யாதித்தன்
கொண்டளிக்குந் தாயில் குழவியொடு - முண்டகமும்
பைங்கூழு மாகப் படர்ந்துசர யுத்துறையை
யங்கானா நீங்கி யடைந்து. (உ)

அந்நதியின் கூலத் தளிமிழற்றும் பூம்பொழில்வாய்ப்
பின்னழுது பெட்பினுற்ற மந்திரியர் - மன்னரொடு
புக்கிருந்தான் மேலைப் புணரியிடைப் போய்விழுந்தான்
செக்கதிரோன் றீமைபொருன் சேர்ந்து. (ங)

அக்காலை யாங்கணிகழ் செய்தியறி வான்முனிவன்
புக்கான் கரந்துறைந்தான் பூபதிமீண் - டெக்கால
மீங்கணைவா யென்றமன்ன ரொண்ணனைப்பார்த் தண்ணலினி
யீங்கணையேன் மீண்டென்று னே. (ச)

அந்தவுரை கேட்டினைந்தார் வேந்த ரமாத்தியர்பின்
பெந்தமிறை வாயா மிதுபொழுதவ் - வந்தணனே
வேணிபிடித் தீர்த்துவண மேவச்செய் கின்றனநீ
யேணிபுரப் பான்வருகென் ரூர். (ரு)

மன்னன் விஞயதனை மாபாவ மாமந்தோ
முன்னளித்த வாங்கன் முடிந்தாலு - மென்னுயிர்யான்
கோசிகனுக் கீந்தவள நாடினிக்கொள் ளேனென்று
பேசமுனி கேட்டெதிர்ந்தான் பேர்ந்து. (சு)

கண்டெழுந்து தாழ்ந்தரச னின்றிடலுங் காதிமகன்
கண்டவனைக் காவலநீ யெற்களித்த - மண்டலத்தை
வாங்கிலையேல் யான்வழங்க மற்றிவர்க ளின்றுரைத்த
தீங்கனைத்துஞ் செய்ததையென்றான் றேர்ந்து. (எ)

இன்னுசெய் தார்க்கு மினியசெயுஞ் சால்புடையா
யுன்னுதி யின்றிவர்க ளோதுபிழை - முன்னேநிற்
கீந்த வரசுரிமை யானினிவாங் கேனென்றான்
வேந்தனவ னுற்றான் மெலிவு. (அ)

என்னையிவர் வைதபிழை யான்பொறுத்தேன் வேள்விக்கு
முன்னளிப்ப னென்றபொருண் முற்றுமெற்கு - மன்னவநீ
நல்குவையோ நல்காயோ வென்றுரைத்தான் மாமுனிவன்
கொல்களிற்றுக் கோனதனைக் கேட்டு. (௯)

வாழ்வுவள நாடனைத்து மாதவயா னிற்கீந்த
போழ்திப் பொருளுமுடன் போனதெனுச் - சூழ்வுற்றே
னாயினுங்கோ பத்தா லளிப்பனென்ற சூள்வழுவே
னாயனையே னல்குவ னிப் பொன். (௧௦)

நீவிடுக வாளென்று நீந்தவன்பூந் தாள்பணிந்தா
னீவதுமுன் மாற்றிவிழி யொன்றிழந்த - தேவனைக்கூய்
வீறுதவ விச்சுவா மித்திரன்று னன்னவனை
வேறிடத்தே வைத்து விழைந்து. (௧௧)

ஆனையின்மே னின்றெறியு மச்சுவண்கற் போமளவு
மானபொரு ணீபோ யளித்தாற்கொள் - போனகிற்கு
வேதனமும் வேந்தன்பால் வேண்டுகனி யாதிதந்தா
லோதனங்கே ளேலா துவர்த்து. (௧௨)

சொன்றிதரின் வேண்டாவென் றேன்றலிவ னூண்பெற்று
லன்றுநிதி நல்கா தகலனுணற் - கென்றுதடு
நங்கெடுவு நண்ணிற் கரிகுறித்து நின்றவுரைத்
தங்கலைவா மற்றைநா டான். (௧௩)

மன்ன யதிக்குரைத்த மாநிதிநல் கேனென்று
னுன்னரசை வாங்கி யுதவுவனென் - னன்னதற்குச்
சம்மதித்தாற் கொண்டனைத்தி சாலுநமக் கஃதென்று
வம்மலியம் பாசகூட்டி விட்டு. (௧௪)

வள்ளலுக்கு நல்கிவிடை வந்தவழி மீண்டகன்றான்
வள்ளிலைவேற் சேனை மகீபரொடு - தெள்ளுமதி
மந்திரியர் தம்மையெலா மாதவன்பின் னேகமொழி
தந்துதிரி சங்குமகன் றான். (௧௫)

உத்தமநீ நீப்பினுயிர் வாழலன்யா னென்றுற்ற
சத்தியகீர்த்திப்பெயரோன் றன்னொருடாத - நைத்தியர்தந்
தேசிகன்முன் போதத் தெரிவைசுதன் சேர்ந்துவர
மூசிருள்போ முன்ன மெழுந்து. (கசு)

பாதமலர் கன்ற வயோத்திப் பதிகடந்து
மீதழலை வீசுசுர மேவியவட் - காதலனைத்
தோளி லமைச்சன் சுமந்தியங்கப் புன்புழுப்போற்
பாலைக் குழறுடிப்பப் பார்த்து. (கஎ)

பட்டமர மேசெழி பாறைவழி யெங்குமுனி
விட்டபணி தேள்குளவி வெம்பூரங் - கட்டறவி
யீண்டி யிடர்விளைப்பத் தீவினையை நொந்தகன்று
கூண்டினனற் கோமதிப்பே ராறு. (கஅ)

என்மரபி னுற்றவிவ னின்னலினி நோக்கியிரே
னென்னுமவ னென்னவெல்லோன் போய்மறைந்தா - னன்ன
தன்னாடை நங்கைமக னண்ணனதி வண்டுறையைத் [பொழு
துன்னியற னுண்டிருந்தார் சோர்ந்து. (ககூ)

மார்க்க நடந்த வருத்தமதி மந்திரிதான்
பார்க்கலனாய்ப் பல்காய் பழங்கிழங்கு - பூக்கமழுஞ்
சோலைவனம் புக்குத் துரீஇக்கொண்டு வந்துசெய்ய
கோவிறைமுன் வைத்தான் குனிந்து. (உ0)

கண்டெடுத்து நல்ல கனியவற்றுட் கோசலர்கோ
னுண்டருணீ யுத்தமவென் றீந்திறைஞ்ச - மண்டுசினங்
கொண்டுகவி யுண்டிவற்றைக் குக்கிவளர்க் கேன்பானெய்
வண்டயிர்சேர றல்லதென்றான் மற்று. (உக)

எங்களர சையமுனிக் கீந்தடவி புக்கவெமைப்
பங்கமிலான் பாலடிசி னீகேட்பி - னெங்கினிப்போய்த்
தேடிக் கொணர்ந்தளிப்பே மென்றிறைவன் சீதகன்பொற்
றுடிணைவி யோடுபணிந் தான். (உஉ)

சற்றிரங்கி வெள்ளி தருபலகீ ருண்டமர்ந்தான்
மற்றிறைசேய் மங்கையொடு மந்திரியும் - பொற்றடக்கை
யாற்கனியைக் கொண்டருந்தி யாம்பருகிப் புற்றரைப்பாய்ப்
பாற்கண் டுயின்றார் படுத்து. (உங)

கோசிகன்ற னுணையினுற் கொண்மூ விடித்துமின்னி
யாசுகமும் வேகமுட னுங்கெழும்பி - வீசமழை
யூற்றரனைந் தானை யுடனடுங்கிப் பார்கலனைப்
பாற்றினஞ்சூழ் வேற்கரத்தோன் பார்த்து. (உச)

மாறுவது மில்லை மழைதான் சதுமறையோ
யாறுபெரு மாமுன்ன மப்புறத்தே - சேறுமென
வீரமிலாச் சுக்கிரனீ ரோருநகர் தோறுமுறக்
காரணமெற் கென்னென்று காணா. (உரு)

எந்நகரிற் புக்கே மிடைவனத்தை விட்டினியோர்
நன்னகரஞ் சேர்ந்தாலந் நாளடியேன் - சொன்னபொரு
ணிற்களிப்பன் வேதியனே நீவருக வென்றரசன்
சொற்கவியைத் தாழ்ந்தான் றுதித்து. (உசு)

வஞ்சமுனி மாற்ற மதித்தெழுந்தான் சல்லியனு
மஞ்சனைத்தோள் வைத்தமைச்சன் முன்னடப்ப-வஞ்சிகர
மோர்கரத்திற் கோன்பற்றி யோர்கரத்திற் கோலூன்றி
யூர்குடிஞை தன்னுளிழிந் துற்று. (உஎ)

நீந்திக் கரையேறி யாங்கொருசார் நீள்பழுவத்
தேய்ந்திருப்பக் காதிமக னேவியபேய் - காந்துவிழிப்
பூதமுன்பின் வந்து புரிந்த கொடுமையினை
யோதமுடி யாதனந்தற் கும். (உஅ)

மாரியொடு வல்லிருளு மாய்ந்தொழியக் காலியியூர்
தேரிலனைத் தான்சாயா தேவிபதி - தாரினன்முன்
னைவருமற் றத்தலத்தை விட்டகன்று கங்கையெனுந்
துய்யநதி சார்ந்து தினைந்து. (உகூ)

பல்வளனும் பார்த்தந்தப் பாகீ ரதிதன்னிற்
சொல்விதியாற் றோய்ந்தெழுந்து நீந்தியெதிர் - புல்கனைமே
லேறியவ ணோர்பொழிற்க ணெய்தினர்க ளெய்தினனற்
சீறிரவி மேனரலை சென்று. (௯0)

மாமுனிவன் மாயத்தால் வாரணமோ டெண்குகரு
மாமடங்கல் வெந்தரக்கு வந்தந்த - மாமலர்க்காத
தன்னிலிறை முன்னோர்கருப் பீதி தவவிளைத்துப்
பின்னடைந்த தஞ்சுழல பேர்ந்து. (௯௧)

அன்னபொழு தாசா னரிச்சந் திரனைவிளித்
தென்னுனைகே ளின்றளவு முற்றவினை - தன்னமினி
மேலுறுவ வெண்ணிலவாம் வேந்தமுனிக் கீயேனென்
னேலரசை வாங்கியளிப் பேன். (௯௨)

இன்னதியா ளின்னுடைய விட்டளங்கண் டோதுகின்றேன்
பின்னணைவ காண்டியெனுப் பேசினனு - லன்னதுகேட்
டன்றிசைத்த சொற்றவறே னையாவென் கேளுடனே
கொன்றிடினு மென்னையென்றான் கோன். (௯௩)

காலையவ னின்றுங் கனைகழற்காற் றார்வேந்தன்
கோலவிழி மங்கைபிறர் கூடவரக் - காலியங்கிச்
சோணமுறீஇத் தோய்ந்தகன்று காளிந்தி சேர்ந்தாடி
நீணணையார் காவமர்ந்தா னேர்ந்து (௯௪)

மாயமனக் கௌசிகப்பேர் மாதவன்வந் தானவனைக்
காயுமிபக் காவலர்கோன் கண்டெழுந்து - போயிறைஞ்சி
யாரணநூ லன்குணர்ந்த வாரியனே யீண்டடைந்த
காரண மென் னென்றான் கசிந்து. (௯௫)

காதிசுதன் பார்த்திவனைக் கண்டடவி நீகுறுகி
வேதனையான் மெய்தளர்ந்தா யென்றுநொந்தே - னுதலினு
லெறகளித்த நாடேக ரில்லென் ன லான்மணந்து
செற்குழலென் மக்களைநீ சேர். (௯௬)

வந்துனது நாட்டின் மகிழ்ந்தரசா ளென்றியம்ப
மந்தரத்தோணை மன்னன முனிவநிறகுத - தந்தபொருள்
பொய்புகன்று கொளளேன புணரேலின் மககளையெற்
றொய்திடினு மெனருன் குனிந்து. (௩௭)

மறறதனைக் கேட்டு மறைமுனிவ னெஞ்சழன்று
வெற்றிமன்ற மேலவருவ காணடியெனச - சொறறகன்று
சேய்ககணினறு சிமைபல போதிததுச சைகையிற்ற
கூய்ககவிவையச செனருன் குழைந்து (௩௮)

பின்னர்ப் பிருகு பெறுதனயன் வந்துறலு
மன்னமன்னுள செல்வ னமைச்சனொடு - மன்னாபிரா
னத்தலமவிட் டோர்கழைககா ளுங்கியங்க விசுவா
மித்திரன்கூய விட்டனன்வெந் தீ. (௩௯)

அவ்வனத்தை யங்கி யடாந்தெரிப்பக் கண்டிறைவ
னிவ்வழலிங் கேதெனலு மேந்தாலின் - றிவவன்னி
மன்மரபி லோருயிரை வாய்மடுத்த லாதேகா
தென்னவெள்ளி சொற்று னெடுததது. (௪௦)

செந்தழலோன் வெய்யபசி தீரவெனை யுண்ணியர்நீ
ருய்ந்தகல்க வென்றர[illegible]ரோடினன்முன் - மந்திரியென்
புல்லுடலைத தீககளிப்பேன் பூபதிசேய பொன்னைவிட்டுச்
செல்லவென்றுன் சேவடியில் வீழ்ந்து. (௪௧)

சிதலை தினப்பட்ட வாலமர மூன்று
மதலையா மற்றதன்வீ ழன்றே - கதழனற்கு
ளென்னின்றீர் யான்சென்று வீழ்வெனீா மந்திரியோ
டின்னேபோ கென்றனனற் சேய். (௪௨)

தையலந்தச் சொற்கேட்டுத் தன்மகனை மோந்துதழீஇச்
செய்யபற்கள் வீழ்ந்தில்லாய் செல்வனே - தெய்யவுனக்
கித்துணிவு மிவ்வறிவு மெங்கடுத்த தென்றுமுகங்
கைத்தலத்தின் மோதிக் கலுழ்ந்து. (௪௩)

மாதருக்குக் காதலரான் மைந்தரா விவ்வுலகி
லாதரவா மாதலினீர் நின்மினென்று - வோதுபுசென்
றெல்லையண்ட கோளத்தை யுற்றடரு மச்சேர்ந்தார்க்
கொல்லிமுன நின்றுரும்பிட்டு. (சச)

மறைநெறியில் லாமே வருவிருந்தோம் பாமே
முறைதிறம்பி மூத்தோ ரிகழ்ந்து - பிறர்பொருளை
வெளவியய லார்மேன் மனம்வைத்தே மாயினெனைச்
செவ்வழனீ செற்றிடுக வென்று. (சரு)

பாய்ந்திடலும் பாவகன்றன் பாவை தனதுசற்பாஞ்
சேர்ந்தவட வைத்தீத் தெறுநமையென் - றோர்ந்துளர்த்தி
லார்ப்படங்கிக் காலை யலர்கதிரைக் கண்டபணிப்
போர்ப்பெனவே போனான் மறைந்து. (சசு)

மண்டு மழறணிய வான்வளைக்கான் முற்றுநெய்தல்
புண்டரிகம் பூத்திலஞ்சி யாய்ப்பொலியக் - கண்டுமகிழ்ந்
தாயிழையாள் கற்பை யரசன் புகழ்ந்தணைந்தான்
றூய்வா ரணவாசி சூழ்ந்து. (சஎ)

நகர்நீங்கியகாண்டம் முற்றிற்று. ஆகூ ௩அசு.

---

## காசிகாண்டம்.

---

வாரணவா சிப்பெயரின் மாநதிநீள் வண்டுறையிற்
சிருசனன் மந்திரிசேய் தேவியொடு-வீரமிகு
கோனிறங்கி மெய்ச்சுருதி கூறுமுறை யான்மூழ்கி
யீனமற வேறி யிகந்து. (க)

திண்களிறு மாய்கின்ற செந்நெற் கதிர்மிளிருந்
தண்கழனி சூழ்காசி சார்ந்துமறைப் - பண்குலவு
நாவினர்முன் னீரிருவர் நண்ணுமணி மாடநிரை
பாவுமறு கூடேகிப் பார்த்து. (உ)

மண்ணுமணிக் கோயிலிடை வாழ்விசுவ நாதனடி
யெண்ணி யிறைஞ்சியகள் ளூர்பொதியி - னண்ணியவட்
கொண்டமைச்சன் றந்தபண்டங் கோவைதசமைத் தன்பினிட
வுண்டிருந்தா னூழ்வினையை யோர்ந்து. (௩

அன்றடுத்த நாளி லசுரகுரு பார்த்திறையைக்
குன்றடுத்த தோளாய் கொடுத்தியெனி - னின்றுகொடு
வட்டபுல வாழ்க்கையன்முன் னூடுபொரு ணீயென்று
கட்டுரைத்தா னெஞ்சங் கனன்று. (௪

எவ்வகையோ விப்பொருளை மின்றளிப்ப தென்றெண்ணித்
தெவ்வடுவேற் கோன்விழிநீர் சிந்திநிறபக் - கொவ்வையிதழ்ப்
பொன்கண்டு மாறறம் புகலா திறையழலென்
பன்னென்று கேட்டாள் பரிந்து. (௫)

கன்னல் புளிக்குமின்சொற் காரிகையே நீயறியாப்
பொன்னுளதோ வென்பாற புகலென்று - மன்னிசைத்தா
னன்னதனைக் கேட்டழுவ லன்புடைய மாதரசி
யின்னமொரு நாளவதிக் கெல். (௬)

பல்லவினைத் தென்னை பதியெனையு மைந்தனையும்
வில்லனிநீ பொன்னென்றாள் வேந்தனனி - யல்லலுழந்
தெல்லிதுவா மென்ன விறைவவிடு மோநமையூழ்
சொல்லுகென்றா ணங்கை துணிந்து. (௭)

ஆயினது செய்வலெனு வண்டலர்கருச் சியமன்னன்
றேயுமிடை மானின் சிரமிசையு - நேயமகன்
சென்னி மிசையுஞ் சிறுபுதல்வைத் தேகண்டார்
மன்னிரங்க முன்னடதி மற்று. (௮)

முன்னை வினைமுடுகி முற்றுதலாற் றீவினையே
னென்னினஞ்சே யில்லா னிவர்களையின் - றிங்ககரிற் [று
போந்துவிற்கின் றேனெனுண் பொருளுடையீர் கொண்மினெ
வாந்தெருவிற் சென்றா னறைந்து. (௯)

என்னை விலையிவர்கட் கென்றுமறை யோனொருவன்
முன்னணைந்து கேட்டான் முடிவேந்தன் - வன்னெடுங்கை
யானைமிசை நின்றெறியு மக்கவண்கற் போமளவுக்
கானபொரு ளென்றிசைத்தா னாங்கு. (௧௦)

அந்த விருநிதியை யாரிடத்தே யீவதெனச்
சந்தமறை யோன்வினவத் தாரிறைவ - னிந்தமகன்
கையிலளிக கென்றுணர்த்தக் காபபியனுக் கன்னோனுங்
கையறைந்தா னீவலென்று காண். (௧௧)

உன்காரத்தே மாநிதிய முற்றதோ வென்றரசன்
மின்கவியைப் பார்த்துரைத்தான் வெள்ளியும்பொன்-னென்க
சேர்ந்ததுநீ திட்டுமுறிச் சீட்டுடன்சேய் மாதிவனை [ரத்தே
யீந்திடுகிவ் வந்தணற்கென் றான். (௧௨)

அந்தவகை மாநிலமன் னாற்றவடி தாழ்ந்தரிவை
யெந்தமக்கு நெஞ்சழுங்க லேந்தலினி - யெந்தநா
ணின்வதனங் காண்குவனோ நீவிடைதா வென்றகன்றான்
மின்விழிநீர் சிந்தி மிக. (௧௩)

அங்கணமா ஞால வரும்பொறையைத் தாங்கலனாய்ப்
புங்கவன்றாள் வைதிதீண்டுப் போந்தவெனக-ருங்களைமேற்
றுங்கலெங்ஙன் கூடுமென்று தாயெனையு நீத்தனையோ
பூங்கழற்கா லையா புகல். (௧௪)

என்றுசுதன் வேந்த னெழிற்களத்தைப் பூண்டரற்றக்
கன்றுசினத் தீத்தெறிப்பக் கண்டுவினாந் - தொன்றுகரம்
பற்றியிழுத தேகொடுபோ யப் பார்ப்பான் றனதகத்தை
யுற்றனன்யாய் செல்ல வுடன். (௧௫)

அக்கொடுமை பார்த்தரச னாற்றலனாய் மூர்ச்சித்துச்
சக்கரமேன் மாழ்கிவிழத் தாங்கியுடன் - மிக்கமதி
மந்திரிதான் றேற்றலுமே மன்னவனு முட்கவலை
சிந்தி யெழுந்தான் றெளிந்து. (௧௬)

பின்மிருத சஞ்சி வினிப்பேர் மனுப்பெற்றான்
மன்முகத்தை நோக்கி மறைமுனிக்குச் - சொன்னபொரு
ளீந்தனைநின் பின்னுமொன்ற வென்றனக்குக் கூலியினி
வேந்ததரு கென்றான் விளித்து. (கஎ)

நல்குவன்வா வென்று நவின்றமைச்சற் பார்த்தென்னை
வில்கொடுநீ பொன்னிந்த வேதியற்கென் - றொல்கலில்சீர்
வேந்துரைப்ப நாயேனை விற்றளிபொன் னென்றன்றோன்
வீழ்ந்துரைத்தான் வள்ளலடி மேல். (கஅ)

அன்னவகை செய்யி னருந்தவற்கஃ தேலாவா [தான்
லின்னினியே யென்னைவிற்றீ பொன்னென்று-மன்னிசைத்
கேட்டென்ன பாவங் கெழுமியதெற கென்றுளளி
வாட்டமுற்று மந்திரியு மன். (ககூ)

ஆலவய லோங்குபழை யாறையமர் நீதிதன்னைப்
போலுமரிச் சந்திரன்றன் பொன்முடியின் - மேலொருபுல்
வைத்தென்ன ராயிடினும் வள்ளலிவற் கொள்ளுமொழி
கைத்தென்றன் கைசகணளித தென்று. (உ0)

போகு மறுகுதொறும் போய்ப்பகர வோர்வீர
வாகுவெனும் பேர்ப்புலைஞன் வள்ளூரம் - வாகுவயிற்
காவினன்முன் வந்தெய்திக் காவிறக்கி வாட்புதைத்து
நீவியங்கை யாலொடுக்கி நின்று, (உக)

ஐயே புலைத்தொழிலை யாற்றிடுமென் போல்வார்க்கு
மெய்யேசொல் விற்கத் தகுதியுண்டே - கையீந்தா
னீகருதிக் கேட்கு நிதியமெலா மின்றென்று
தாகமொடு கேட்டான்முன் றாழ்ந்து. (உஉ)

மன்னனுடம் பாடுகொண்டு மந்திரிவிற் பேனுனக்கிங்
கென்னவிலை யேதென்றா னக்கொலைஞன் - மின்னுபதி
னாயிரம்பொன் னென்றமைச்ச னாடலுமற் றன்னோனுந்
தூயவஃ தீவலென்றான் சூழ்ந்து. (உங)

மந்திரிதன் பேரால் வரைந்தா வோலையவற்குத்
தந்து பொருள்வாங்கித் தானவர்தம் - மந்திரிக்கீந்
தையநீ போய்வருக வென்றறைய வாங்குமகிழ்ந்
தையெனவே போனா னவன். (௨௪)

வாய்மை விதரணத்தின் மற்றொருவர் நேரில்லாத்
தூய்மனத்துத் தோன்ற றுணையடியைப் - பாய்மார்க்க
ணீராட்டி யின்றோடு மெற்கிறைவ நின்பணிசெய்
போராட்சி பேர்த்ததுவோ வென்று. (௨௫)

சாற்றி யாற்றிநின்ற சத்தியகீர்த் திப்பெயரோற்
றேற்றிவிடை நல்கிச் செழுமறையா - னாறமர்கு
மூனிட்ட காவை யுலம்பொருதிண் டோண்மீதிற்
றூனிட்டுத் தன்விதியை யோர்ந்து. (௨௬)

புன்றொழிற்சண் டாளவுருப் பூண்ட தறுகண்மன்
பின்றொடர்ந்து பீடில் புலைச்சேரி - துன்றியவன்
றங்குமுடை நாறுந் தனிக்குடிலைச் சார்ந்தசுமை
யங்கிறக்கி யீந்துநின்றா னால். (௨௭)

ஆங்கம் மாலி யரசனைப்பார்த் தேமக்கே
பாங்கிற் பிணஞ்சுடற்குக் காற்பணமு - மோங்குகொள்ளி
யாடையுநீ வாங்கி யளித்தெனக்கு வாய்க்கரிசி
வாடலின்றி யட்டுண்டு வாழ். (௨௮)

என்றியம்பி னானக வேந்தலரிச் சந்திரனு
நன்றெனவே வெஞ்சுடலை நண்ணியவட் - பொன்றினர்மெய்
கொண்டெரிந்த பாடைக் கொடுங்கழியாற கொட்டிலொன்று
கண்டுபுக்குச் சொன்னபணங் கால். (௨௯)

வெய்யகொள்ளி யாடை வெறுதுரியோ பால்வாங்கி
யையகொள்ளென் றுண்டாற் களித்தவைவாய்ப் - பெய்யரிசி
புட்டிலின்கண் வைத்துக்கட்டி முன்பிணங்கொணடே போட்ட
கட்டிலின்கண் வீற்றிருக்குங் கால். (௩0)

அந்நகரோ ரம்பலத்தில் யாமினியந் தித்தேதன்
மன்னவனைத் தேடி மதியமைச்சன் - றுன்னியிடு
காட்டிற் சிறுகுடிலிற் கண்டிறைவை யேங்கிமனம்
வாட்டமுற்று வீழ்ந்தலற மண். (௯௧)

நன்றுங்கா னல்லவாக் கண்டு நுகர்ந்தயா
மன்றுங்கா லல்லற் படலாமோ - வின்றுடாய்
தோச்சித் துணைவெனத் தேற்றியவன் கைக்களித்தான்
வாய்ச்ச வரிசிதனை மற்று. (௯௨)

மற்றதனை மந்திரிமா மன்னனடி தாழ்ந்தேற்றுப்
பெறமதற் குப்புல்லிற பெட்பினல்கிப் - பிற்றைமயத்
தோடுவிழுந் தண்டலத்தை யுற்றெடுத்துக் குத்தியட்டுப்
போடவிறை நின்றுன் புசித்து. (௯௩)

காசிகாண்டம் முற்றிற்று. ஆ சகக.

---

## மயானகாண்டம்.

---

பின்னடிமை கொண்ட பிராமணனும் வன்கணனிற்
றுன்னியசெய் மாதிவருட் டோகையன்னுள - பன்னுமல
கிட்டு மனைமெழுக னெற்குத்த லெபபணியுந்
திட்டமுறச் செய்தொழுகத் தேர்ந்து. (௧)

சோமகனும் கோலஞ்சித் தூக்கமொழிந் தேவடியச்
சாமமெனத் தானெழுந்து போய்வனத்தி - லோமவிற [த்
திந்தனம்பைங் கூர்ச்சமிவை கொய்தெடுத்துக் கொண்டணைந்
தந்திடுங்கூ ழுண்டுதரித் தான். (௨)

உற்றசிறு ரோடொருநாட் போய்த்தேவ தாசனெனுங்
கொற்றவன்சேய் கானங் குறுகியவண் - வற்றுதுவர்
கட்டிச் சுமந்து திரும்பிவருங் காற்கண்டு
வட்டைக்கோர் பால்வண் குகை. (௩)

கொய்யவது தன்சுமையைக் கோளியின்கீழ் வைத்திறக்கி
யையெனப்போ யாங்குப் பறித்திடலும் - வெய்யமுனி
கற்பனையால் வந்து புதர்க்கட் கரந்துறைந்த
சர்ப்பம் கடித்தபடந் தாழ்த்து. (௪)

அக்கணமே மாய்ந்தா னலறிவெரீஇ வீழ்ந்திளைஞர்
சக்கரமார் பொறநேர்த தரணிகணே - துக்கமொடு
பாயந்தோடும் பச்சைப் பரிசெலுத்திப் போய்க்குடபான்
மாய்ந்தான் மறிகடற்குள் வீழ்ந்து. (௫)

நந்த மெலுவனின்ன நண்ணுமைக் கேதுவென்னென்
றந்தவடக் கிழமர்ந்த மககளெலா - முந்தியவன்
சென்றதிசை சென்றிறந்து நிற்பப் புரட்டினர்பார்த்
தொன்றிநனி செல்ல லுளத்து. (௬)

மீண்டங்குத் தத்தம் விறகெடுத்துக் கொண்டொல்லை
மாண்டநகர் மாலையொடு புகுமகற - ரேண்டிநின்ற
தாயுடனன் ஞன்மடிந்த தன்மையிட நன்கறைந்து
போயினர்தம் மில்லம் புரிந்து. (௭)

ஆயிழையாள் கேட்டழுங்கி யவ்வுரையை மெய்ம்மறந்து
வாயிலிடை வீழ்ந்தெழுந்தங் குண்மருவி - யேயபுணி
யாவு மறவியற்றி யாளுடைய பூசுரன்றன்
சேவடிமுன் சென்று விழுந்து. (௮)

நாகத்தான் மாண்டொழிந்தா னுன்பெற்ற வோர்குமர
னேகத்தா வாங்குவிடை யென்றழலும் - வேகத்தாற்
சீதிமறை யோனடிமை செத்தானிற கேனட்டுஞ்
சேறலொழி தேமொழிநீ யென்று. (௯)

சொற்றணன்கேட் டொண்ணுதலா டோன்றலிறந் தானென்
பெற்றவயின் பேயேற் கெரியாதோ - சற்றிரங்கி [னுற
கஸ்குவிடை போயெடுத்து நானடக்கஞ் செய்திங்கே
யெல்வருமுன் னெய்துவனென் றுள். (௧௦)

நின்மொழிதப் பாமைந்தப் பாவெனினீ யேகென்று
கன்மனனைத் தன்னோன் கழறலுமே - மின்மருங்குற்
காரிகைதன் கால்பின்னக் கார்க்குழல்கண் ணீருடனே
சோரவுள முந்தத் துனைந்து. (௧௧)

சுற்றநகர் தாண்டிமசார் சுட்டி யுரைத்தழிபோ
யுற்றலங்கை யோரிகுறர் சூழுநப் - பெறறமகற்
கண்டு சனையெறிமான் போலிறகி மெய்ம்மறந்து
மண்டலமேன் மாழ்கிவிழுந் தாள். (௧௨)

பின்னெழுந்து பேதை பெருங்கயற்க ணீராட்டிப்
பொன்னலர்க்கை யாலெடுத்துப் புத்திரனை - துன்னவுடைத்
தகுமடி மேல்வைத்தே சாதகம்பே யும்மிரங்கச்
செங்குமுத வாயைத் திறந்து. (௧௩)

இந்திடத்தின் மாசுணைத்தா ணீகடியுண் டேயிறப்ப
முந்துவினை யாது முயன்றறியே-மைந்தாவோ
வென்னிறைவு யானுமினி யாரைநம்பி வாழ்வமுலா
யென்ன வரற்றி யிசைத்து. (௧௪)

தன்னமைத்தோண் மீதிற் றனிமகனை வைத்துக்கொண்
டன்னத்தின் றாவி யனிச்சமஞ்சும் - பொன்னடிக்கட்
கன்முள ளுறுத்தக் கணங்குறளசெந் நாயடர்ப்பப்
புன்முடைநா றீமம் புகுந்து. (௧௫)

வானவர்தங் காப்பின் மகனைவைத்தே கிச்சுரீந்து
போனகுறைக் கட்டை பொறுக்கிவந்து - தானடுக்கிச்
செங்கனலை மூட்டிச் சிறுவனையக் கட்டையின்மே
லங்கெடுத்து வைத்தா ளழுது. (௧௬)

கண்டு கனல்விளக்கங் காவலவன் சார்ந்தேடி
மண்டிருளில் வந்துதனி வாய்க்கரிசி - தண்டறலவ
காற்பணநல் காதே சுவஞ்சுடலென் னென்றெறிந்தான்
கார்க்கொட்டாக் கன்முளையைக் காய்ந்து. (௧௭)

சேவடிமேல் வீழ்ந்து தெரியாதிவ் வூர்வழக்கம்
பாவியெனக் கேது பணம்வழங்கத - தாவிலருட்
கணணவரா வான்முடிந்த காதலனை யான்றகனம்
பண்ணவரு மென்றாள் பதைத்து. (கஅ)

செந்திருவே நீண்டவலனை யான்புலையற் கோரடிமை
தந்துமுழத் தானைபணங் காலாணடாற் - சிந்தனிலே
நின்மகனை நீசுடுக வெற்குரிய வாய்க்கரிசி
மன்விடுவன் காணென்றான் மன். (ககூ)

காசங் கிடம்புழைநீ ளாயினிவ ணிம்மகனைப்
பாசுறழ்தோ ளேற்றிப் படர்ந்துசுட - லேசெனவே
யென்னானு செய்குவனோ வென்றிரந்தாள் கோதைகழுத்
தொணணுணைக கண்டான்கோ னுற்று. (உ0)

வஞ்சி நினது வளரிடற்றின் மங்கலநாண்
டுஞ்சித அலகைப் பொருள்சரத்திர - சொருசமுமில்
லென்றிசைத்த வேலா திதனைவெனக் கீதியென்றான்
குன்றிசைக்குந் தோளான் குறித்து. (உக)

வார்முரசங் கேட்டசுனை மான மடப்பிமதான்
டாமிசைவீழ்ந் தேபாரந் தந்திங் கென்கணவ - னொருவர்க்
கல்லதுமற றியார்க்கு மறிவருகா ணிவ்விழிநு
ணொல்லுமதோ கண்டானை னுற்று. (உஉ)

இத்தலத்தே புக்கபின்னை யெம்பெருமா னார்மொழியும்
பொய்த்ததுவோ மாயோன்புராரியினு - மெய்த்தவனே
நல்லநின்றேன் வாடரிய சறபொழிவ தென்னென்று
சொலலிச சொரிந்தனள்கண் முத்து. (உங)

வாய்மை யதுவினவி மன்னன் மனமறுகிச்
செய்முகத்தைப் பார்த்தேதவச் சிறியா - ளாங்கடித்த
போதனையும் பூவையையும் விற்றதொடி டேனைநோக்கெதன்
றேருகினையன் புற்றசெல்வா வோ. (உச)

அன்றெனது கந்தரத்தை யார்வமொடு பூண்டழகீ
துன்றுசின வேதியன்கை தொட்டீர்ப்ப - நின்றிருந்தேன்
பாவையுனைத் தோட்கொணர்ந்து பாலகனை நீச்சுடலும்
பாவியின்று காலெறிந்தேன் பார்த்து. (உ௫)

வென்றிவடி வேற்றாதை வெட்டியாற் காட்பட்டா
னென்றுமினி யெய்திநமை மீட்கவல்லா - னென்றெணியோ
வாருயிரை நீத்திட்டா யப்பாவோ வென்றரற்றிப்
பாரகத்தே வீழ்ந்தான் பதைத்து. (உ௬)

கொண்கனிவ னாமென்று கோதை துணிந்தேர்தலடித்
தண்கமலந் தாழ்ந்துதலை வாபுவியின் - கண்ணெவர்கருந்
தெய்வமே வருத்ததல்லாற் சேராது வேறினிநீ
நையலற முன்னென்றா ளுணர்ந்து. (உ௭)

நீசனுக்கி யான்றொழும்ப னீலவிழி யாயவற்குத்
தாசுபண நல்கேனேற் றுன்னுரைவை - நீசடிதி
போந்துனையாள் வோற்குப புகன்றுடைபொன் வாகிவந்தேற்
றீந்துசுடேன் மைந்தனையென் றான. (உ௮)

வன்பாணி கர்த்த மனத்தனிப்பொன் றேடுடையை
யன்பாற கொடாது னறகொடியோன் - றன்போவி
யிம்மகனைப் யார்த்திருததி யேகியளித தாற்கொணர்வல்
செம்மலிவ னென்று தெரிதது. (உ௯)

தாரணிமா மன்னன் றனயனைய னின்றழுங்க
நேரிழையாள் வெஞ்சுடலை நீத்தொல்லைக - காரியலுங்
கன்மதில்சூழ் காசி கடிநகரி வாய்நுழைந்து
பொன்மனையார் வீதியிடைப் புக்கு. (௩0)

ஆங்க ணுவளகத்தே யணமிச் சிலபடிறர்
பாஙகி னெடுத்துப் படர்ந்தபுறங் - ஞாங்களவிற்
காசணிகள் கைக்கொண்டு காதி யெறிந்திட்ட
ஞாகியிறை கான்முளையைக் கண்டு. (௩௧)

இம்மதலை யார்மதலை யென்னவல மந்துகண
மெம்மதலை தன்னை யெறிந்ததுகொ - லம்மவெனு
வாடுறறுச் சேயை வனசமலர்க் கையேந்தி
நாடுற்றுண் மெய்க்குறியை நன்கு. (௬௨)

விடிந்திடுமு னவ்வூர் விறற்கா வலர்க
ளிடிந்தமதி லேறி யிழிந்தாங்- கடைந்திறைவன்
செததமக வோடு தெரிவைதனைக் கணணுற்று
மொத்துபுகை யார்த்து முனிந்து. (௬௩)

மண்டபத்தில் வீற்றிருக்கு மாமகுட மன்னவன்முன்
கொண்டுவிட்டுக் கும்பிட்டுக் கொற்றவனே - கண்டிரவுன்
மைந்தனையிம் மாது மறுகெடுத்துக கொண்டிருககத்
தந்தனமீண் டென்றிசைத்தார் தாழ்ந்து. (௬௪)

அந்தமொழி கேட்டரச னங்கை யமைத்தவளை
வந்தபடி யாவுமுரை வல்லியெனச் - சந்த்ரமதிப்
போததெரிவை தாளைப் பெருமலர்க்க ணீரருவி
வார்ததலம்ப நின்றிறைஞ்சி மறறு. (௬௫)

என்று நரளை யெடுத்தருந்து மோரரக்கி
வென்றிவடி வேலிறைவ நின்னகர்வந் - தின்றிரவிற்
றினறிடயா னின்மகனைத் தேர்ந்து புறஙகொடுபோய்க்
கொன்றனன்கா ணென்றுள் குழைந்து. (௬௬)

இன்னற் கடல்கடப்பா னேந்திழையா ளோர்ந்துளத்துச்
சொன்னமொழி கேட்டுத் துணைவ ளைப்பாராத - தந்நிருபன்
செய்ய முகத்திவளே செல்வனைக்கொன் றுளென்று
மையமெனக் கிலலென்று ராய்ந்து. (௬௭)

அந்த நிலைக்க ணரிவைகரம் யாத்திர்த்து
வந்தவர்கண் மன்று மகனையெடுத் - துந்தடிப்பின்
சென்றிக் கொடியள் செருப்பக்கண் டீர்த்துணைந்தே
மின்றுயிர்சாம் விட்டிடுமென் றூர். (௬௮)

சொன்னவடி தானிச் சுரிகுழலா டன்னடியோ
பின்னை யெவரடியோ பேர்ந்தோடி - யிங்கொடிக்க
ணோக்கி யணைதிரொரு கோன்கழற்காற் காசியர்கோன்
போக்கினன்சில் லோரைப் புகன்று. (௩௯)

போற்றி யிறையடியைப் போந்தவர்க ளங்கெறிக்கண்
மாற்றி மறைமுனிவன் றீட்டிவைத்த - கோற்றொடியா
டன்னடியே கண்டோடித் தாழ்ந்திவள்கால் வைப்பல்லான்
மன்னவிலை மற்றடியென் றார். (௪0)

சொல்லுதிநீ யுண்மையெனத் தோகைமுகந் தானோக்கிக்
கல்லுறழ்தோள் வேந்தன் கழறவெனை - யல்லதிலை
கள்ளி யெனவறைந்தாள் காவலன்கே ளாவியந்தே
யுள்ளங் கசிந்தா னுற. (௪௧)

அந்நிலையிற் கங்கு லருந்தவன்செய் மாயமொடு
மன்னனரிச் சந்திரன்றன் வல்வினையு - மன்னிரிய
மங்கையின்கைக் கட்டுடனே வாரிசத்தின் கட்டவிழச்
செங்கதிரோன் வந்தனன்கீழ்த் திக்கு. (௪௨)

புத்திரனை யந்தப் புரங்கொடுபோ மாறிசைத்து
முந்தை விதிப்பயனை முன்னிமுன்னி - மெத்தநொந்து
மாசிலாக் கற்புடைய மானைவதை செய்விப்பான்
காசிபதி யெய்ந்து கருத்து. (௪௩)

தூதுவரைக் கொண்டழைத்துத் தொல்வீர வாகுவெனுங்
காதகனைக் கண்டிந்தக் கள்ளிதனைக் - காதுகநீ
கட்டுடனே கொண்டேகி காய்களத்தி லின்றென்று
கட்டளைசெய் திட்டான் கவன்று. (௪௪)

கோள்வீர வாகுக் கொலைஞன் குரிசிலிணைத்
தாள்வீழ்ந்து போற்றித் தளரணங்கைத் - தோள்வீக்குந்
திண்கயிற்றாற் பற்றித் திரும்பிப் புலைச்சேரிக்
கொண்குடிசை தன்னையடைந் துற்று. (௪௫)

நன்றெழும்ப னானவரிச் சந்திரற்கூய் மன்மகனைக்
கொன்றவிர்ந்த கள்ளியைநீ கொணடேகி - யின்றெறிக
வென்ன விளம்பிடியோ டேந்தா னவன்கரநதே
மின்னுதன்கை வாளை விதிநது. (௪௬)

வாளுடனே மாதை மலர்க்கரத்திற் கொண்டிறைவேய்த்
தோளியைத்தான் பார்த்தழுங்கத்தோகைகணடு-வேளையா
யென்பொருட்டு நீயிறங்க லென்றான்கோன் பின்றொடர்ந்தா
னன்பமைச்சன் வநதிறைஞ்சி யாங்கு. (௪௭)

பின்னர்த் திரண்டு சனங்கள்பல பேசிவரக்
கன்னிகைநேரள் யாதத கயிறுபற்றி - மன்னவர்கோன்
வன்னமணித தோரணநீள் வாயிகந்து வந்திறுநதான்
பொன்னகரி னெச்சிப புறநது. (௪௮)

வண்டமர்தார் வள்ளலுக்கு வஞ்சமனக் கௌசிகன்றான்
கண்ட விடர்முடிவு காணபதறகன் - றண்டரொடு
வாசவனை நாரதனை மாவசிட்டன் கூட்டிக்கொண
டாசினிக்கண வந்துறைந்தா னால். (௪௯)

வந்துவிசு வாமித் திரமுனிவன் மன்னனெதிர்
நந்திலன்யா னுடனகெகன் றேசாறபி - யுய்ந்தரக
மிவ்வுயிரு நீபெறுக வென்னவவன் றான்பரவி
கவ்விவிழி யோடரச னைநது. (௫௰)

ஒழுக்க முடையாரிங் கூற்றுக்கோ லன்ன
விழுக்க லுடையார்க ளிசைப்ப - வழுக்கியுந்தம்
வாயிறைற் றீய வழங்குபவோ பொய்யியம்ப
நீயெமக்குச் சொலலுவதென் னோர்ந்து. (௫௧)

செய்மையுடன் சேறலினு னற்றுணைவ னெவ்வொளிக்கும்
போயொழியா வெவ்விருளைப் போக்குதலாற - பாயவொளி
செம்பொருளைக் காட்டுதலாற் றேசிகன்மெய் யாலுஞ்சொன்
னம்பி யதனைவிடே னாம். (௫௨)

நில்லாத யாக்கையையு நீளரசின் வாழ்வினையு
மெல்லா நிலையினவென் றெண்ணியிசைக் - கொல்லாத
வெய்ய நரகத்தே வீழ்விக்கும் பாவத்தைச்
செய்யத் துணியலம்யாந் தேர். (௫௩)

என்ன முகம்புலர்ந்து மாய்ந்திருடி யேகினன்கூ
யன்னவனை மானீ யறைந்ததிற - மிந்நிலைக்கட்
கண்டகல்க வென்றனாப்பக் காதிமக னுணமுட
னண்டியவ னோடமர்ந்தா னங்கு. (௫௪)

பேதைகைந்நாண் பற்றிப் பிணஞ்சுடுகோ லாற்றள்ளித்
தாதவிழ்தார்க் கோசலர்கோன் றன்னிறந்த - காதலனண்
ணைத்தலமுற் றுன்றெய்வ மன்பிணினைந் தேத்தியிரு
நெய்த்தகுழல் பூர்வமுக நின்று. (௫௫)

என்றறையத் தெய்வந் தொழாஅ ளிதயத்தி
னன்றுபராய் நாயகனை நன்னுலதா - ளின்றெளியே
னுவியிறப் பஞ்சி யறம்வழுவல் வாழியெனுக்
காவலனைத் தேற்றினின்றாள் கண்டு. (௫௬)

நின்மலனாய்ப் பூரணனாய் நித்தியனாஞ் சிற்பரனாற்
பன்மறையின் பல்லறத்துண் மிக்கவுண்மை - நன்னெறிக்க
ணின்றனனே லுண்டே னிறையிவண்மாட் டிறின்மை
யொன்றுகெனு வீசினளொள் வாள். (௫௭)

மாசடையா நெஞ்சத்து மன்னன் கரத்தெடுத்து
வீசியவவ் வெள்ளயில்வாள் வீழ்ந்தன்று - மூசரிக்கு
நற்பிரசம் வாக்கு நறுமலர்த்தார் போலவசையாக்
கற்புடைய நங்கை களத்து. (௫௮)

---

மயானகாண்டம் முற்றிற்று. ஆ. ௪௭௭.

---

## மீட்சிக்காண்டம்.

அங்கண் விசும்பி னடலரவ முண்டமிழூந்
திஙகளெனத் தேவி திகழ்ந்தனளாற் - றுஙகமுனி
மாயப் பெருநெருப்பின் மன்னினன்மா மன்னவர்கோன்
றூயொளிய பொன்னிற் சுடர்ந்து. (க)

வானிந் திரன்முன்னோ ரோடு மறைவசிட்ட
ஞனந்த மாடி யவளியுற்றான் - கோனின்று
நன்மையுற்றா னென்னினொரு நக்கியம்பி யாடினனுங்
கன்மனத்துக் கௌசிகனுங் கண்டு. (உ)

மாயவன்முற் றேவர்களு மன்னு கணத்தவருங்
காயுமிப மாமுகனுங் காங்கெயனும் - பாயபுடை
கண்ணமலை மாதுடனே நம்பனரு வெள்விடைமே
லணணலெதிர் வந்தா னமர்ந்து. (ங)

கண்டுவிழி நீர்பொழியக் காவலர்கோன் றேவியுட
னண்டர் பிரானை யணங்குடனே - தண்டெனமண் [ளத்
வீழந்திறைஞ்சி யேததியன்பின் வெவ்விடர்தீர்ந தின்பவெள
தாழந்தவச னாய்நின்றா னங்கு. (ச)

அப்பூதி நற்புதல்வ னன்றெழுந்த வாறேபோற்
றப்போதா வள்ளலரிச் சந்திரன்சேய் - துப்போதி
வீசயிறகை யேள்விளிப்ப வீழ்ந்தெழுந்து தாள்பணிந்தான்
காசியர்கோன் மைந்தனொடு கண்டு. (ரு)

பால ருயிர்த்தெழுதல் பார்த்தங் கயோத்தியர்மன்
பாலிகழுந் திங்குதலைப் பாவையன்னாள் - சாலிவயல்
சூழ்ந்திலங்குங் காசிபதி சூழ்ச்சித் துணைவனன்பாற்
றாழ்ந்திசைத்தார் சங்கரனற் றாள். (சு)

ஆயபொழு தெம்மா னழைத்து முனி கௌசிகனை
நீயிறைவற் கூறு நிகழ்த்துவகை - யேயதிற
னீங்கிலையா ரெல்லா மினிதுணர வின்றெடுத்துப்
பன்னுகென வாய்மலர்ந்தான் பார்த்து. (எ)

கோசிகனெஞ் சுட்கிக் குறுமதியச் செஞ்சடையான்
வாசமலர்த் தாள்வணங்கி வாழ்த்திநின்று - வாசவன்முன்
மாவசிட்டன் வாய்மொழிகருத் தான்மாறாச் சொற்றமுதல்
யாவையுஞ்சொற் றனங் கெடுத்து. (அ)

பின்னமலன் பேதாய் பெரிதிழைத்துந் தீங்கிறைக்கு
நின்னெண்ணமுற் றுயிலேயே நீமனத்து-முன்னிநனி
வென்றியையார் தோல்வியையார் மேயினர்க ளீணகொக்க
வென்றியம்ப வெய்தியகத் தீடு. (௯)

விச்சுவா மித்திரப்பேர் மேயமுனி வீழ்ந்திறைஞ்சி
நச்சுவாய்ப் பாம்பணிந்த நாயகனே - பிச்சனே
னண்ணலரிச் சந்திரன்ற னுரசில் குணஞ்செயலை
யெண்ணியறி யாதிகழ்ந்தே னேற்று. (௧0)

வேத முணர்வசிட்டன் வென்றவன்யான் றோற்றவனென்
மாதவத்திற் பாகி மகிழ்ந்தரசற் - கீதலுட
னன்றவனெற் கீந்த வரசுரிமை யாவுமவற
கின்றளித்தல் செய்தனனென் றான். (௧௧)

காய்ச்சியபொன் னுணியினைக் கன்னத்தி விட்டாங்குப்
பேச்சதனைக் கேட்டுப் பெரிதுருகி - மாச்சுருபபார்
தாரதிப னெற்றோர்க்குத் தந்ததுபின் வாங்கிவிழே
னுரளற்றி லந்தணனென் றான். (௧௨)

பாரத்திலகேள் யானே பட்டாந்தபடர்ந் தாங்குதயுஞ்
சீர்த்தவமே விட்டேன் செழுங்லத்தைக் - காத்தமர்வேன்
மான்வசிட்ட னேநகைத்த வஞ்சினைத்தா னுன்முடைறமை
யான்மதித்துச் சோதித்தே னீண்டு. (௧௩)

ஆனுகநின் னுடன் றருந்தலத்தோன் சொற்றனுங்கோ
னுளியுருற் காயிமங் காத்திருந்தேன் - காணேயாகி
யகதைமறை யோருவிற்று மாநிலமெய் யானுரா
னிதியனறு நீயாள்கென் றான். (௧௪)

அந்தவுரை கேட்டனுகி யங்கியரன் முன்பிறைஞ்சி
மைந்தனையு மங்கையையு மெமருவிற்ற - னிந்தனையோ
காவலவன் ஞேர்பொருட்டுக் காசினித்தே வாய்க்கொண்ட
வாவணமீ தென்றிட்டா ளுங்கு. (௧௫)

சாலனுமக் காலமலன் காலணைந்து தாழ்ந்தேத்திக்
கோலமுடி வேந்தைக குறித்திவணீ - சிலமிலா
நீசனுக்கா ளாவையென்று நீசரூய்த் தோன்றியுனை
யரசறக்கொண் டேன்முறியீ தாம். (௧௬)

நீயிருந்து காத்த நெடியசுடு காடனைத்தும்
பாயமகச் சாலேயே பாரொன்ன - வீயுடலைத்
தீக்குமிடஞ் சொன்ன திறந்திகழக கண்டடைந்தான்
வீகருகமுற காலோன் வியப்பு. (௧௭)

செம்மலைக்கண் டன்பாற் றிகழுமயோத் திப்பதிசேர்ந்
திம்முனிவ னோர்தவமு மேற்றுண்டு - செம்மைமுடி
தாங்கி யெமதுபதஞ் சார்கவந்தத் தென்றிறைபின்
பாங்கின் வலாரிமுகம் பார்த்து. (௧௮)

நீயு முனிவரு நீள்கா சியர்பதியும்
வாயிலயோத் திப்பதியிம் மன்னனுடன் - போயிவற்கு
மாமகுடஞ் சூட்டி மகிழ்ந்துறையுள் சேர்கவெனு
வாய்மலர்ந்து போனுன் மறைந்து. (௧௯)

சொற்றபணி தாழ்ந்து சுடர்முடிக்கட் கொண்டுநின்றூர்
கற்றடிவேற் கைம்மகவான் முன்ஞேர்கண் - மற்றைக்
கடவுளர்தஞ் சார்பு கலந்தனர்போ யந்தச்
சுடலை யகன்று துனைந்து. (௨௦)

கூர்த்தவிரு ணீங்குதலுங் கோபதிமா யோகியர்சொல்
வார்த்தை மறுப்பஞ்சிக் காசியர்மன் - னேர்த்தகொடித்
தேரிவர்ந்து கோசலர்கோன் றேவிசுத ஞேடமைச்சன்
சாரலவர் தாமுமுட னூர்ந்து. (௨௧)

காசிபதி சேனை கருங்கடல்போன் முன்னடப்பத்
தூசிகுடை யாதபத்தாந் துன்பமற - மூசியெழு
வார்முரச மார்ப்ப வளநகரை நீத்தணைந்தான்
வாரணவா சிக்கரையின் வாய். (௨௨)

அந்நதிநீ ராடி யகன்றங் கனைவருடன்
றென்ன யமுனை சிவணியதி - னன்னரும
மூழ்கித் தணைந்து முதிர்பவத்தின் மூலத்தைப்
போழ்கங் கையையடுத்தான் போந்து. (௨௩)

சேர்ந்து விதியுளியந் தீர்த்தத்திற் றோய்ந்திறைவன்
றீர்ந்திந் திரன்முதலோ ரோடுதில்லம் - வார்ந்தகிரி
மண்டு தடம்பலவு மற்றிகந்து கோமதியின்
வண்ட விடையிறுத்தான் வந்து. (௨௪)

கூட்டிக் கொடுபதியைக் கோவணனுங் குற்றதிறங்
கேட்டுவகை பூத்துக் கிளர்கடறபா - லோட்டாதி
போலலையர் தானை புரசனங்கள போந்திறையைக்
காலிறைஞ்சி வீழ்ந்துநின்றார் கண்டு. (௨௫)

பொன்னகர்க்கோ னாதியரும் போதவிரு சேனையுட்
னந்திவிட் டேகி யயோத்திநகர் - மன்னவன்பொற்
கோயில் குறுகிக் கொடித்தேரிழிந்துபுக்கான்
பாயமணி மண்டபத்தின் பால். (௨௬)

வாய்மையரிச் சந்திரனை மாமகுட மைந்தவித்தோர்
வாய்மலர்ந்து வாழ்த்தெடுப்ப வாசவன்றன் - சேயமலர்க்
கையெடுத்துச் சூட்டிக் களைந்தாசி போய்ப்புகுந்தா
னையவம ராவதிக்க ணாங்கு. (௨௭)

ஆசியுரைத் தந்தணரு மாங்ககலக் காதிமகன்
கோசலர்கோ மானே கொடுத்தனன்கொண் - மாசிலனக்
கென்றவைத்திற் பாதி யெனவுதக மங்கையெடுத்
தன்றெவருங் காண வளித்து. (௨௮)

யானறியா தன்னை யிகழ்ந்தவெலா நீபொறுப்பாய்
மோன வெனுஅ முனிவசிட்டற் - கானுவுனை
சொற்றிறையைத் தேற்றிமகன் றேகையொடு மந்திரியை
யுற்றனன்கான் வாழ்த்தி யுவந்து. (௨௯)

மின்னு மணிக்கவரி வீசவரிச் சந்திரன்பின்
பொன்னணைமேல் வீற்றிருப்பப் பூமகன்சேய்-தன்னைமற
மந்தணர்க்கு மாமோ வெனப்பரவிக் கேட்டனனற்
கொந்தவிழ்தார்க் காசியர்தங் கோன். (௩0)

தோய நிலத்தியல்பாந் தொல்குணமே கௌசிகனுக்
காயதென மாவசிட்ட னுங்கறைய - நீயெனகோ
தன்னான் வரலாறென் றனைலடி தாழ்ந்துரைப்பச்
சொன்னான் முனிவனிது சூழ்ந்து. (௩௧)

மீட்சிக்காணடம முற்றிற்று. ஆ ௫0அ.

## உத்தரகாண்டம்.

கன்னல் வயலுடுத்த காசிபதி நீகேட்டி
பொன்னலர்வாழ் வோன்மரபிற போந்தகுசன் - றன்னெழு
மைந்தன் குசற்குக் கிரிவிரிச மாநாடு [வாய்
தந்துகுச நாபற்குத் தான். (௧)

செங்கெலுயர் கௌசாம்பித் தேயம் வசூர்த்தனுக்குத்
தன்னிகரில் வாரணமுந் தார்வசுவுக் - கன்னமமர்ந்
தார்வனசம் பொய்கைக் கலரும் வசுமதியு
மார்வமுட னேயளித்தா னல். (௨)

அங்கவரிற் கௌசாம்பி யான்குசநா பற்குதித்த
மங்கையர்தா நூற்றுவரோர் வாசமலர்ப் - பொங்கரகத்
தாடச் சமீரணன்கண் டாயிழையீ ரெற்குநலங்
கூடக் கொடுதிரென்றான் கூர்ந்து. (௩)

எங்கள் பிதாவறிய வெம்மை மணம்புரிந்தா
லங்குனைச்சோ வோமென் றவரியம்பப - பொங்குசினங்
கொண்டு முதுகொடியக கோதையவை யோதிரனி
மண்டனிலவீழ் விதககன்ருன் வாயு. (ச)

வாளிகழுங் கண்ணார் மனையடைந்தின் ரேற்குமைப்ப
மீளியினைந் தியார்கருமது விள்ளாது - சூளியென்போன்
பெற்ற பிரமதத்தப் பேர்மகறருப் பேதையவை
கற்றமுறத் தந்தா னயந்து. (ரு)

பின்னர்க குசநாபன் பேணிப் புரிமகத்தே
நன்னரெழிற் காதியெனு நாமனுறமு - னன்னவற்கு
நவ்விவிழிக கௌசிகப்பேர் நந்தனிக்குப் பின்னுதித்தான்
றெவ்விருக்குங் கௌசிகனுஞ் சேய். (சு)

தேசிருசி கத்தவனைச் சேர்ந்தவன்வெஞ் சாபத்தாற்
கோசிகைதான் கோமதிப்பே ராருனள் - கோசிகனும்
வேந்த னொருஞான்று வேட்டைசெய வோர்விபினஞ்
சேர்ந்துழைபின் னோடித திரிந்து. (எ)

தானையொடு சோர்ந்து தவஞ்செய் யிடம்புகுத
யானிரங்கி வெம்பசியை யன்னவற்குந் - தேனுவினாற்
றீர்ததபின்ன ரிச்காம தேனுவைததா வெற்கென்று
பார்த்தறைந்தான் வீழ்ந்தென்பதத்து. (அ)

யானுரிய னல்லே னிதற்கெனலுஞ் சேனையொடு
கோனந்தக் கோவை வளைந்துவடத் - தானிமிழ்ப்பா
னேருதலுஞ் சீறி யிருத்துப் படையனைத்து
நாகமிசை யுறறதவ்வா னன்கு. (கூ)

அங்கரசன் மைந்தரெனை தாவி கொளக்கருதிப்
புங்கமழை போர்ந்து பொழிந்தனர்யான் - வெங்கனலி
சிந்தவிழித் தேநோக்கச் செத்தொழிந்தார் நூற்றுவருஞ்
சிந்தைகொதித் தேந்த றெரிந்து. (க0)

மேவிக் கொடும்படைகள் விட்டனனென் மீதுகண்டு
தாவிலெழுத் தண்டத்தை நாட்டினன்யான-றாவுசர
மாதிச் சுதனமெலா மாங்கதுதா னுங்கிடனு
மேதிவனை வெல்வதியா மென்று. (௧௧)

மீண்டு தனதுபதி விட்டனைத்துங் கீழ்பாலின்
பீண்டுந் தவத்தை யியற்றிடவுங் - தூணடசனிச்
செங்கரத்த னேவுந் திலோத்தமையாற் றீர்ந்துதவ
மங்கவளைப் பின்புசபித் தாய்ந்து. (௧௨)

தென்றிசையி னேகிச் சிவன்சே வடிபடர்ந்து
நன்று தவமுனுறற நாதனையணர் - தன்றவற்கு
வேண்டும் வரமளிப்ப வீறினனந் நாட்பிருது
மாண்ட மதலைதிரி சங்கு. (௧௩)

மெய்யுடனே விண்புகுதல் வேண்டுமெரு ளென்றனும்யா
னையவம் தொல்லா தெனவறையத் - துய்யவனே
யெய்துவனென் னேண்ணத்தை யின்னே யடைந்துபிற
செய்தவர்பா லென்றான் றிரிந்து. (௧௪)

இன்று துறைத்தமையா னீபுலைய னுகெனயான்
சொன்னேன் புலையனாய்த் துன்பெய்தி - யென்றேடு
மாறுற்று நிற்குமந்த மாதவனைக் கண்டுரைப்ப
வீறும் விமானம் விளித்து. (௧௫)

கள்ளவிழ்தார்க் காவலனே யேறிதன்மே லென்னவிறை
பொள்ளெனவே திப்புகலும் பொன்னுடு - தள்ளினரால்
வானவர்கள் வீழுமவன் மாமுனிவற் கோலமிட
மீனுலகில் வேந்தைவைத்தான் வேர்த்து. (௧௬)

என்றே டெதிர்த்தவ் விருடி யெடுத்தவெலாங்
கொன்னே யழிந்திடலாற் கோசலர்தம்-மன்னிவன்பா
லின்றிழைத்தும் வெவ்விடர்க ளெய்திலனுல் வென்றியெனு
மன்றவிசைத் தான்வசிட்டன் மற்று. (௧௭)

மற்றதனைக் கேட்டெழுந்து வாரணவா சிக்கிறைவன்
செற்றபுல வேந்தர் திறமனைத்து - நற்றவநீ
யல்ல தவனிமிசை யாரறிய வல்லரென்றுச்
சொல்லிப் பணிந்தான் றுதித்து. (கஅ)

திங்களுறைந் தாங்குத் திகழ்கா சியரதிபன்
றுங்க வசிட்டற் றொழுதுகொண்டு - மங்குலுற
ழங்கையரிச் சந்திரனை யன்பிற் றழீஇவிடையூர்
பொங்குபடை யோடணைந்தான் போய. (ககூ)

வள்ள லயோத்தியிற்பின் மாமடங்க லாசனமேல்
வெள்ளொளிமுத் தின்கவிகை மின்னவமர்ந் - தள்ளிலைவேற்
கையரசர் மந்திரியர் காலிறைஞ்சிப் போற்றமுறை
செய்திருந்தா னின்பந் திளைத்து. (உ0)

## வாழ்த்து.

வேதஞ் சிறக்கமனு நீதி விளங்கவிப்பா
ராதங்க மாறவிசும் பாஞ்சொரிக - வோதுஞ்சொற்
றூமவரிச் சந்திரன்ற னற்சரிதங் கற்குநருந்
தாமமர்க வோங்கித் தழைத்து. (உக)

உத்தரகாண்டம் முற்றிற்று. ஆ. ருஉக.

---

## அரிச்சந்திரவெண்பா முற்றிற்று.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.